தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண் 2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோவில் அருகில்),எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை-600 018. தொலைபேசி எண்.243447590

**ஆணை நாள் 09.11.2020**

**முன்னிலை**

**திரு ரா. ராஜகோபால், இ.ஆ.ப., (ஓ)**
**மாநில தலைமைத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA7976/SCIC/2019**

திரு சி. கொளஞ்சி மாணிக்கம், .. மேல்முறையீட்டாளர்

/எதிர்

பொதுத் தகவல் அலுவலர்
தொழிலாளர் இணை ஆணையர்,
(குறைந்தபட்ச ஊதியம்), பொது அதிகார அமைப்பு
தொழிலாளர் ஆணையர் அலுவலகம்,
சென்னை - 06.

## ஆணை

மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் 04.06.2019 தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பிய மனுவில், தொழிற்சங்கம் பதிவு செய்ய தங்களுக்கு மனு அளித்த நாளிலிருந்து எத்தனை நாட்களுக்குள் பதிவு செய்யப்படும், என்னென்ன ஆவணங்கள் மற்றும் அலுவலக நடைமுறைகள் பின்பற்றப்படும், குறைந்தபட்சம் எத்தனை உறுப்பினர்கள் தேவை, விசாரணை அதிகாரி என்ன நடைமுறைகள் பின்பற்ற வேண்டும், எத்தனை நாட்களுக்குள் விசாரணை முடித்து அறிக்கை தர வேண்டும் போன்ற தகவல்களை வழங்குமாறு கேட்டு விண்ணப்பித்துள்ளார். பொதுத்தகவல் அலுவலர் 20.06.2019 தேதியிட்டு தகவல் வழங்கியுள்ளார். அதன்பின்னர் மனுதாரர் 19(1)-ன் கீழ் 04.07.2019 தேதியிட்டு முதல் மேல்முறையீட்டு மனுவை அனுப்பியுள்ளார். மேல்முறையீட்டு அலுவலர் 22.07.2019 தேதியிட்டு தகவல் வழங்கியுள்ளார். திருப்தியடையாத மனுதாரர் 13.08.2019 தேதியிட்டு பிரிவு 19(3)-ன் கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார்.

2. மேற்சொன்ன இரண்டாம் மேல் முறையீட்டு மனுவின்மீது இவ்வாணையத்தால், 09.09.2020 அன்று பிறப்பிக்கப்பட்ட ஆணையில், மனுதாரர் கோரும் தகவல்களை முழுமையாக வழங்குவதற்கு கடைசி வாய்ப்பு வழங்கும் வண்ணம் 25.09.2020-க்குள் வழங்க பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டிருந்தது. மனுதாரருக்கு எவ்வித தகவல்களும் வழங்கப்படவில்லை என்றாலோ, முழுமையற்ற தகவல்கள் வழங்கப்பட்டிருந்தாலோ அல்லது தவறான, குறைபாடான தகவல்கள் வழங்கப்பட்டிருந்தாலோ, மனுதாரர் 30.09.2020-க்குள் ஆணையத்திற்கு கடிதம் மூலம் தெரிவிக்குமாறு அறிவுறுத்தப்பட்டிருந்தது.

3. மேலே குறிப்பிட்டுள்ள தமிழ்நாடு தகவல் ஆணையத்தின் ஆணையின்பால் மனுதாரரின் கவனம் ஈர்க்கப்படுகிறது. அந்த ஆணையில் மேற்கூறப்பட்ட வழக்கில் பொதுத்தகவல் அலுவலர் தகவல்களை வழங்க பணிக்கப்பட்டிருந்தார். அத்தகவல்களை பொதுத்தகவல் அலுவலர் கடித எண்.எஸ்3/11563/2020, நாள்.24/09/2020 என்ற கடிதத்தின் வாயிலாக வழங்கியதாக பொதுத்தகவல் அலுவலர் தெரிவித்துள்ளார். (இணைப்பு). அதன்பின்னர், பல நாட்களாகியும் வரப்பெற்ற தகவல்கள் சம்மந்தமாக மனுதாரரிடமிருந்து எந்தவொரு ஆட்சேபணையும் தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் 07.11.2020 வரை பெறப்படாத காரணத்தால், மனுதாரரின் வழக்கு முற்றாக்கி ஆணையிடப்படுகிறது.

**ஒம்/-(ரா. ராஜகோபால்)**
**மாநில தலைமைத் தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப்பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA7976/SCIC/2019</u>**

<u>பெறுநர்</u>

<u>பொது அதிகார அமைப்பு</u>

பொதுத் தகவல் அலுவலர்
தொழிலாளர் இணை ஆணையர்,
(குறைந்தபட்ச ஊதியம்),
தொழிலாளர் ஆணையர் அலுவலகம், சென்னை - 06.

<u>மனுதாரர்</u>

திரு. சி. கொளஞ்சி மாணிக்கம்,
ஓட்டுநர் ஆசிரியர் SRO.1051 (TNSTC),
எண்.27/1980, எத்திராஜிலு நகர்,
பாண்டியன் நகர் விரிவாக்கம்,
வழுதரெட்டி, விழுப்புரம் - 605 401.

TG_PC 09112020

SA 7976/19

<u>தொழிலாளர் துறை</u>

அனுப்புநர்

பொது தகவல் அலுவலர்/
தொழிலாளர் இணை ஆணையர்
(குறைந்தபட்ச ஊதியம்)
தொழிலாளர் ஆணையர் அலுவலகம்,
சென்னை–06.

பெறுநர்

மாநில தலைமைத் தகவல் ஆணையர்,
தமிழ்நாடு தகவல் ஆணையம்,
எண்.2, தியாகராயா சாலை,
(ஆலையம்மன் கோவில் அருகில்)
எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை, சென்னை – 600 018.

TAMILNADU INFORMATION COMMISSION CHENNAI 600 018
29 SEP 2020
031461

<u>கடித எண்.எஸ்3/11563/2020, நாள்.24.09.2020</u>

ஐயா,

பொருள்: தகவல் அறியும் உரிமை சட்டம் 2005 – ஆணை எண். SA 7976/மா.த.த.ஆ/2019 – பெறப்பட்டது – தொடர்பாக.

பார்வை:
1. சென்னை, தமிழ்நாடு தகவல் ஆணையத்தின் ஆணை எண்.SA 7976/மா.த.த.ஆ/2019, நாள்.09.09.2020. (இவ்வலுவலகத்தில் பெறப்பட்ட நாள்.23.09.2020)
2. இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடித நாள்.24.09.2020.

---------

பார்வை 1–ல் காணும் ஆணையின்படி மனுதாரருக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்பபட்ட பார்வை 2–ல் காணும் பதிலின் நகல் தகவலுக்காக இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

பொது தகவல் அலுவலர்/
தொழிலாளர் இணை ஆணையர்
(குறைந்தபட்ச ஊதியம்)

24.09.2020

<u>பதிவு அஞ்சல் ஒப்புதல் அட்டையுடன்</u>

<u>தொழிலாளர் துறை</u>

அனுப்புநர்

பொது தகவல் அலுவலர்/
தொழிலாளர் இணை ஆணையர்
(குறைந்தபட்ச ஊதியம்)
தொழிலாளர் ஆணையர் அலுவலகம்,
சென்னை–06.

பெறுநர்

திரு.சி.கொளஞ்சி மாணிக்கம்,
ஓட்டுநர் ஆசிரியர் SRO.1051(TNSTC)
எண்.27/1980 எத்திராஜிலு நகர்,
பாண்டியன் நகர் விரிவாக்கம்,
வழுதரெட்டி,
விழுப்புரம்–605 401.

<u>கடித எண்.எஸ்3/11563/2020, நாள்.24.09.2020</u>

அய்யா,

பொருள் தகவல் அறியும் உரிமை சட்டம் 2005 – சில தகவல்கள் கோரப்பட்டது – தொடர்பாக.

பார்வை
1. திரு.சி.கொளஞ்சி மாணிக்கம் என்பவரது மனு நாள்.04.06.2019.
2. பொது தகவல் அலுவலரின் கடித எண்.எஸ்3/21293/2019, நாள்.20.06.2019.
3. மனுதாரர் திரு.சி.கொளஞ்சி மாணிக்கம் என்பவரின் மேல்முறையீட்டு மனு நாள்.04.07.2019.
4. மேல்முறையீட்டு அலுவலரின் கடித எண்.எஸ்3/24735/2019, நாள்.22.07.2019 .
5. திரு.சி.கொளஞ்சி மாணிக்கம் என்பவரின் இரண்டாவது மேல்முறையீட்டு மனு நாள்.13.08.2019. (தமிழ்நாடு தகவல் ஆணையருக்கு முகவரியிடப்பபட்டது)
6. சென்னை, தமிழ்நாடு தகவல் ஆணையத்தின் ஆணை எண்.SA 7976/மா.த.த.ஆ/2019, நாள்.09.09.2020. (இவ்வலுவலகத்தில் பெறப்பட்ட நாள்.23.09.2020)

---------

பார்வை 6–ல் காணும் தமிழ்நாடு தகவல் ஆணையத்தின் உத்தரவு தொடர்பாக, பின்வரும் விவரங்கள் தங்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

பார்வை 1–ல் காணும் 04.06.2019 நாளிட்ட மனுவில் கோரப்பட்ட விவரங்கள் தொடர்பாக பார்வை 2–ல் காணும் கடிதத்தில் பின்வரும் பதில் அளிக்கப்பட்டது.

| வரிசை எண். | மனுதாரர் கோரிய விவரங்கள் | அளிக்கப்பட்ட பதில் |
|---|---|---|
| 1. | தொழிற்சங்க பதிவு செய்ய தொழிற்சங்க பதிவாளர் அலுவலகத்திற்கு மனு அளித்த நாளில் இருந்து எத்தனை நாட்களுக்குள் பதிவு செய்து தரப்படும் என்ற தகவல் தேவை. | பதிவுச்சான்று வழங்க தேவையான அனைத்து விவரங்களும் சரியாக இருக்கும் நேர்வில், மனு பெறப்பட்ட நாளிலிருந்து 45 நாட்களுக்குள் பதிவாளரால் பதிவுச்சான்று வழங்கப்படும். |
| 2. | தொழிற்சங்க பதிவு செய்வதற்கான என்னென்ன ஆவணங்கள் மற்றும் என்ன அலுவலக நடைமுறைகள் பின்படுத்த வேண்டும் என்ற தகவல் தேவை. | சட்ட சம்பந்தப்பட்ட விளக்கங்கள் கோரப்பட்டுள்ளன. இவை தகவல் அறியும் உரிமைச் சட்டம் பிரிவு 2(f)–ன் படி தகவல் என்ற வரையறைக்குள் வராது. |
| 3. | தொழிற்சங்க பதிவிற்கான குறைந்த பட்சம் எத்தனை உறுப்பினர்கள் தேவை என்ற தகவல் தேவை. | |
| 4. | தொழிற்சங்க பதிவுக்கான மனுவின் பேரில் விசாரணை அதிகாரி என்ன என்ன நடைமுறைகள் பின்பற்ற வேண்டும் எத்தனை நாட்களுக்குள் விசாரணை முடித்து அறிக்கை தர வேண்டும் என்ற தகவல் தேவை. | |

அதனைதொடர்ந்து பெறப்பட்ட தங்களின் 04.07.2019 நாளிட்ட முதல் மேல்முறையீட்டு மனு தொடர்பாக, பொது தகவல் அலுவலரால் அளிக்கப்பட்டுள்ள பதில் சரியானது என்ற விவரம் பார்வை 4–ல் காணும் மேல்முறையீட்டு அலுவலரின் கடிதத்தில் தங்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் தங்களது 13.08.2019 நாளிட்ட இரண்டாவது மேல்முறையீட்டு மனுவில் பொது தகவல் அலுவலர் 30 நாட்களுக்குள் பதில் அளிக்கவில்லை என குறிப்பிட்டுள்ள விவரம் சரியானதல்ல எனவும், பொதுத்தகவல் அலுவலர் மற்றும் முதல் மேல்முறையீட்டு அலுவலரால் தங்களுக்கு உரிய காலத்திற்குள் பதில் அளிக்கப்பட்டுள்ளது என்ற விவரம் தங்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

தங்களது 04.06.2019 நாளிட்ட மனுவில் வரிசை எண்.2,3,4–ல் கோரப்பட்டுள்ள விவரங்கள் 1926–ம் ஆண்டு தொழிற்சங்கங்கள் சட்டம் மற்றும் 1927–ம் ஆண்டு தொழிற்சங்கங்கள் சட்டத்தின் கீழான விதிமுறைகளில் உள்ள விவரங்களாக இருந்ததால், அவை தொடர்பாக, "சட்ட சம்பந்தப்பட்ட விளக்கங்கள் கோரப்பட்டுள்ளதால் தாங்கள் கோரியுள்ள விவரங்கள் தகவல் அறியும் உரிமை சட்டம் பிரிவு 2(f)–ன் கீழ் தகவல் என்ற வரையறைக்குள் வராது" என்ற பதில் தங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

மேலும் தாங்கள் கோரியுள்ள விவரங்கள் தொடர்பாக, 1926–ம் ஆண்டு தொழிற்சங்கங்கள் சட்டம் மற்றும் 1927–ம் ஆண்டு தொழிற்சங்கங்கள் சட்டத்தின் கீழான விதிமுறைகளில் இருந்து தாங்கள் அறிய இயலும் என்ற விவரம் தங்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

பொது தகவல் அலுவலர்/
தொழிலாளர் இணை ஆணையர்
(குறைந்தபட்ச ஊதியம்)

24.09.2020

நகல்

மாநில தலைமை தகவல் ஆணையர்,
தமிழ்நாடு தகவல் ஆணையம்,
எண்.2, தியாகராயா சாலை,
(ஆலையம்மன் கோவில் அருகில்)
எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை,
சென்னை – 600 018.